# ஆசிய பசுபிக் பிராந்திய Ozone2Climate ஓவியப் போட்டி

## நியதிகளும் நிபந்தனைகளும்

## 1.கருத்துகள்

1.1. **வியன்னா சமவாயம்கிகாலி திருத்தம் உள்ளடங்கலான மொன்றியல் , உடன்படிக்கை காரணமாக ஏற்பட்ட ஓசோன் படை பாதுகாப்பு மற்றும் காலநிலை மாற்றத் தணிப்பு என்பவற்றுடன் தொடர்புற்ற அடைவுகள் , நன்மைகள் ,நடவடிக்கைகள். ஓவியப்படைப்பினால் பின்வரும் கருத்துகள் தொடர்பில் ஆனால் அவற்றுக்கு மட்டுப்படுத்தப்படாது முதன்மையான செய்தியை வழங்க முடியும்**:

- கிகாலி திருத்தம் உள்ளடங்கலான மொன்றியல் உடன்படிக்கையினை அமுல்படுத்துவதிலிருந்து ஓசோன் படைக்கும் காலநிலைப் பாதுகாப்பிற்கும் கிடைத்த நன்மைகள். உதாரணம், மொன்றியல் உடன்படிக்கையின் கீழ் கட்டுப்படுத்தப்பட்ட பதார்த்தங்களை பதிலீடுசெய்வதற்கான சிறந்த காலக்கிரம பழுதுபார்த்தல் நடைமுறைகள், ஓசோன் மற்றும் காலநிலை நட்புறவு மாற்றீடுகளைப் பின்பற்றுதல் போன்றவை.
- கிகாலி திருத்தம் உள்ளடங்கலான மொன்றியல் உடன்படிக்கையின் அமுலாக்கத்திற்கு உதவும் பொருட்டு பொது மக்கள் மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகள் / முன்னெடுப்புகள்.
- மொன்றியல் உடன்படிக்கையின் கீழ், விசேடமாக காலநிலை மாற்றத்துடன்கூடிய கிகாலி திருத்தத்தின் கீழ் ஓசோன் படைக்கும் காலநிலைப் பாதுகாப்புச் செயற்பாடுகளுக்கும் இடையிலான உறவு.
- மொன்றியல் உடன்படிக்கையின் அமுலாக்கச் சூழமைவில் ஓசோன் படை மற்றும் காலநிலைப் பாதுகாப்புக்கான பெண்களின் வகிபாகமும் பங்களிப்பும்.
- 2022 ஆம் ஆண்டில் ஓசோன் படையினைக் குறைக்கும் பதார்த்தங்கள் தொடர்பிலான மொன்றியல் உடன்படிக்கையின் 35 ஆவது ஆண்டுவிழா.
- ஓசோன் படை மற்றும் காலநிலைப் பாதுகாப்புப் பணிநோக்கிற்கு சிறந்த சேவையாற்றும் பொருட்டு குளிரூட்டல் மற்றும் காற்றுப்பதனாக்கல் உபகரணங்களை நிறுவுதல், காலக்கிரமத்தில் பழுதுபார்த்தல், பராமரித்தல் மற்றும் அகற்றுதல் என்பவற்றிலான நன்நடைமுறைகள்.
- மொன்றியல் உடன்படிக்கையின் அமுலாக்கம் காரணமாக ஏற்பட்ட அடைவுகள்.

- நிலைத்துநிற்கும் அபிவிருத்திக் குறிக்கோள்களுக்கு (SDGs) பங்களிப்புச் செய்யும் மொன்றியல் உடன்படிக்கையின் கீழ் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் தாக்கம்.
- ஓசோன் படை குறைவடைவதன் தாக்கங்கள் / விளைவுகள்.

## 1.2. உலக ஓசோன் தினம் 2021 இன் கருப்பொருள்

***மொன்றியல் உடன்படிக்கை - எம்மையும் எமது உணவையும் தடுப்பு மருந்துகளையும் குளிராக வைத்திருத்தல்***

மொன்றியல் உடன்படிக்கையானது ஓசோன் படையைப் பாதுகாப்பதற்கு உலகளாவிய உடன்படிக்கையொன்றாக உருவெடுத்ததுடன் இது ஆற்றியுள்ள பணியானது இற்றைவரை மிக வெற்றிகரமான சுற்றாடல் உடன்படிக்கைகளில் ஒன்றாக இதனை உருவாக்கியுள்ளது. இன்று, ஓசோன் படையிலுள்ள துவாரமானது பழைய நிலைக்குத் திரும்பிவருவதுடன், மறுபுறத்தே மனித ஆரோக்கியம், பொருளாதாரங்கள் மற்றும் சூழற்றொகுதிகளை பாதுகாக்குகின்றது என்பதையே ஓசோனைக் குறைக்கும் பதார்த்தங்களைக் கட்டங்கட்டமாக இல்லாமற் செய்வதற்கான ஓர் ஒன்றுபட்ட உலகளாவிய முயற்சி அர்த்தப்படுத்துகின்றது. ஆனால், இவ்வாண்டின் உலக ஓசோன் தினத்தின் மூலம் துலாம்பரமாக காட்டுவதற்கு முற்படும் போது, மொன்றியல் உடன்படிக்கையானது மிக அதிகமானவற்றை ஆற்றுகின்றது – அப்படிப்பட்டதாக காலநிலை மாற்றத்தின் வேகத்தை குறைத்தல் மற்றும் உணவுப் பாதுகாப்பிற்குப் பங்களிப்புச் செய்யும் குளிராக்கல் துறையில் வலுசக்தி வினைத்திறனை அதிகரிப்பதற்கு உதவுதல்.

ஓசோனைக் குறைக்கும் பதார்த்தங்கள் பல காலநிலையை சூடாக்குகின்றன, எனவே இவ் உடன்படிக்கையானது ஏற்கனவே காலநிலை மாற்றத்தின் வேகத்தை குறைத்துள்ளது. மொன்றியல் உடன்படிக்கைக்கான கிகாலி திருத்தமானது மிக உறுதியான காலநிலை நன்மைகளை வழங்குவதற்கென உருவாக்கப்பட்டுள்ளது. இத் திருத்தத்தின் கீழ், ஐதரோபுளோரோகாபன்களை (HFCs) கட்டங்கட்டமாக குறைப்பதற்கு தேசங்கள் கடப்பாட்டினைக் கொண்டுள்ளன. ஐதரோபுளோரோகாபன்கள் ஓசோன் படையினை சேதப்படுத்தாத அதேவேளை, இக் குளிர்விக்கும் பதார்த்தங்களானவை வீரியமிக்க பச்சைஇல்ல வாயுக்களாகும். இணங்கிக்கொள்ளப்பட்டவாறு, அவற்றின் பாவனையைக் குறைத்தல் மூலம், இந்நூற்றாண்டின் இறுதியளவில் 0.4°C வரை பூகோள வெப்பநிலை அதிகரிப்பை தவிர்க்கும் அதேவேளை, ஓசோன் படையினைத் தொடர்ந்து பாதுகாப்பதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது.

குளிராக்கல் துறையில் மேம்பட்ட வலுசக்தி வினைத்திறனுக்கான வாய்ப்பொன்றினையும் கிகாலி திருத்தம் வழங்குகின்றது.

ஐதரோபுளோரோகாபன்களை (HFCs) பதிலீடுசெய்யும் புதிய புத்தாக்கமானது, காலநிலைத் தாக்கங்களை அதிகரிக்காமல் சௌகரியமான குளிராக்கல் மற்றும் குளிர்ச் சங்கிலி வினைத்திறன்களின் விரிவாக்கத்தினை அனுமதித்து, குறைந்த மின்சக்தியைப் பாவிக்குமாறு காற்றுப்பதனாக்கல் மற்றும் குளிரூட்டலை மீள்வடிவமைப்பதற்கான வாய்ப்பொன்றினை வழங்குகின்றது. குறிப்பாக அபிவிருத்தியடைந்துவரும் பொருளாதாரங்களில் ஐதரோபுளோரோகாபன் (HFC) நுகர்வினைக் குறைத்தலினதும் மேம்பட்ட குளிர்ச் சங்கிலி வினைத்திறன்களினதும் சேர்க்கையானது உணவு இழப்பினையும் தடுக்கும்.

மனித நுகர்வுக்காக உலகளாவிய ரீதியில் உற்பத்திசெய்யப்படும் சகல உணவுகளினதும் கிட்டத்தட்ட மூன்றிலொரு பகுதியானது, குளிர்ச் சங்கிலிகளுக்கான அணுக்கம் போதாமையினால் ஒவ்வொரு வருடமும் பெருமளவிற்கு ஒன்றில் இழக்கப்படுகின்றது அல்லது விரயமாக்கப்படுகின்றது. நிலம், நீர் மற்றும் வலுசக்தி போன்ற மதிப்புமிக்க வளங்களை விரயமாக்குவது மட்டுமன்றி, உலகளாவிய ரீதியில் வருடமொன்றுக்கு மதிப்பிடப்பட்ட மொத்த பச்சைஇல்ல வாயுக்களின் 8 சதவீதமானதை உருவாக்கியும், உணவு இழப்பும் விரயமும் பில்லியன் கணக்கான ஐக்கிய அமெரிக்க டொலர்களை தொகையிடுகின்றது.

கூடுதல் வினைத்திறனாகவும், கூடுதல் சுற்றாடல் நட்புறவுடையதாகவும், மற்றும் கொள்வனவுசெய்து இயக்குவதற்கு மலிவானதாகவும் உள்ள குளிர்ச் சங்கிலித் தீர்வுகளை விருத்திசெய்வதன் மூலம், குளிர்ச் சங்கிலிகளானவை கூடுதல் பயனுறுதி வாய்ந்தவையாகவும் பரந்துபட்ட ரீதியில் கிடைக்கத்தக்கவையாகவும் மாற்றமுறும். உணவு மற்றும் தடுப்பு மருந்துகள் பாதுகாப்பான மற்றும் நல்ல நிலையில் மக்களுக்குச் சென்றுசேர்வதை உறுதிப்படுத்தி, விவசாயிகள் மற்றும் மருந்துப்பொருள் வழங்குநர்கள் போன்ற உற்பத்தியாளர்களுக்கு முன் குளிராக்கல், குளிர்பதனக் களஞ்சியம் மற்றும் குளிர்பதனப் போக்குவரத்து என்பவற்றுக்கான அணுக்கத்தினை இது வழங்கும்.

இவ் உலக ஓசோன் தினத்தில், எம்மையும் எமது உணவையும் தடுப்பு மருந்துகளையும் குளிராக வைத்திருப்பதற்கான அதன் பரந்துபட்ட முயற்சிகளில் மொன்றியல் உடன்படிக்கையினையும் அதன் கிகாலி திருத்தத்தினையும் நாம் கொண்டாடிப் பாராட்டுகின்றோம்.

# 2. வளங்கள்:

https://www.ozone2climate.org/resources

# 3. தகுதி

தெற்காசியா, தென்கிழக்கு ஆசியா மற்றும் பசுபிக் தீவு நாடுகள் வலையமைப்புகளிலுள்ள மக்கள் எவருக்கும் பங்குபற்றுவதற்குத் தகுதியுண்டு. 15 வயதுக்குக் கீழ்ப்பட்ட பங்குபற்றுநர்களுக்கு பெற்றோரின் சம்மதம் தேவைப்படுத்தப்படுகின்றது.

3.1. **வயதுப் பிரிவுகள்**

- **இளம் வயதுப் பிரிவு**: 15 வயதினை அல்லது 2021 செம்டெம்பர் 16 ஆம் திகதியிலுள்ளவாறு (உலக ஓசோன் தினம்) அதற்கு இளமையான வயதினைக் கொண்ட ஒரு தனிப் பங்குபற்றுநருக்கு அல்லது பங்குபற்றுநர் குழுவுக்கு, விண்ணப்பத்தினையும் ஓவியப்படைப்பையும் சமர்ப்பிக்கும் போது இப்பிரிவில் பெற்றோரின் சம்மதம் தேவைப்படுத்தப்படுகின்றது.
- **பொது வயதுப் பிரிவு**: 2021 செம்டெம்பர் 16 ஆம் திகதியிலுள்ளவாறு (உலக ஓசோன் தினம்) 15 வயதிற்கு மூத்த வயதினைக் கொண்ட ஒரு தனிப் பங்குபற்றுநர் அல்லது பங்குபற்றுநர் குழு சார்பில்.

இணக்கப்பாட்டு உதவி நிகழ்ச்சித்திட்டத்தின்[2]) தெற்காசியா, தென்கிழக்கு ஆசியா மற்றும் பசுபிக் தீவு நாடுகள் வலையமைப்புகளின் பிரசாவுரிமையினைக் கொண்ட அல்லது அவற்றில் வசிக்கின்ற ஒரு தனிப் பங்குபற்றுநருக்கு அல்லது பங்குபற்றுநர் குழுவுக்கு[1]) இப்போட்டிகள் மட்டுப்பாடற்றவை.

- பிராந்திய மட்டப் போட்டிக்கு நுழைவதற்காக தேசிய மட்டத்தில் வெற்றியாளர்களாக தெரிவுசெய்யப்படும் போது விண்ணப்பதாரிகள் மற்றும் இளம் வயதுப்பிரிவு பற்றிய தகுதியானது தேசிய அடையாள அட்டை/ கடவுச்சீட்டிற்கூடாக நிரூபிக்கப்படும்.
- ஒழுங்கமைப்புக் குழு, நடுவர்கள், மற்றும் அவர்களின் உரிய குடும்ப உறுப்பினர்களுக்கு பங்குபற்றுவதற்குத் தகுதியில்லை.
- இப்போட்டியில் பங்குபற்றுவதற்கு பெண் பங்குபற்றுநர்கள் விசேடமாக ஊக்குவிக்கப்படுகின்றனர்.

*[1] பங்குபற்றுநர் குழு சார்பில், குழு உறுப்பினர்களின் அதிகூடிய வயதின் அடிப்படையில் வயதுப்பிரிவு (இளம் அல்லது பொது) நிர்ணயிக்கப்படும். பிராந்தியப் போட்டியில் வெற்றியாளராக அல்லது இரண்டாமிடம் பெறுநராக தெரிவுசெய்யப்படின், குழுவின் ஒவ்வொரு உறுப்பினருக்கும் ஒரு சான்றிதழ் மற்றும் நினைவுச்சின்னம் / வெற்றிக்கிண்ணம் வழங்கப்படும்.*

*[2]* ஆப்கானிஸ்தான், பங்களாதேஷ், பூட்டான், புருனே தருஸ்ஸலாம் (*Brunei Darussalam*), கம்போடியா, சீனா, குக் தீவுகள் (*Cook Islands*), பிஜி, இந்தியா, இந்தோனேஷியா, ஈரான், கிரிபாஸ் (*Kiribati*), கொரிய சனநாயக மக்கள் குடியரசு (*Korea DPR*), கொரியக் குடியரசு, லாவோ மக்கள் சனநாயகக் குடியரசு (*Lao PDR*), மலேசியா,

மாலைதீவு, மார்ஷல் தீவுகள் (*Marshall Islands*), மைக்குரோனீஷியா (*Micronesia*), மொங்கோலியா, மியன்மார், நவூரு (*Nauru*), நேபாளம், நியூவே (*Niue*), பாகிஸ்தான், பலோ (*Palau*), பப்புவா நியூ கினி, பிலிப்பைன்ஸ், சமோவா (*Samoa*), சிங்கப்பூர், சொலமன் தீவுகள், இலங்கை, தாய்லாந்து, கிழக்கு திமோர் (*Timor Leste*), டொங்கா (*Tonga*), தூவாலு (*Tuvalu*), வனுவாட்டு (*Vanuatu*) மற்றும் வியட்நாம்.

# 4. ஓவியப்படைப்பு வகுதிகள்

**புகைப்படக்கலை**: கனதியான டிஜிட்டல் கையாளுகையின்றி (அப்படிப்பட்டதாக மேலதிக தரவு உருப்படிகளைச் சேர்த்தல் அல்லது அசல் புகைப்படத்திலிருந்து ஏதேனும் தரவு உருப்படிகளை நீக்குதல்) புகைப்படக்கருவி (camera) ஒன்றிலிருந்து எடுக்கப்பட்ட அசல் (original) புகைப்படங்களை உள்ளடக்குதல். ஒளியமைப்பு (lighting), பிரகாசம் (brightness), வேறுபாடு (contrast) போன்ற சிறிதளவு புகைப்படச் சீராக்கங்களைப் பயன்படுத்த முடியும்.

**சித்திரம் வரைதல்**: பாரம்பரிய முறையில் கையினால் சித்திரம் வரைதல் / ஓவியம் தீட்டல் அல்லது ஏனைய இரு பரிமாணம்சார் கையினால் செய்யப்படும் ஓவியம் மற்றும் டிஜிட்டல் ரீதியில் சித்திரம் வரைதலை உள்ளடக்குதல்.


**வரைபட வடிவமைப்பு**: கணனியின் உதவியைப்பெறும் வடிவமைப்புகள் மற்றும் கணனி அல்லது கையடக்க தொலைபேசி செயலிகளிலிருந்தான (applications) வரைபட செய்நிரல் / பயன்பாட்டுச் செயலிகள் (graphic program/applications) என்பவற்றை உள்ளடக்குதல்.

# 5. மாதிரிகள்

**வரைபட வடிவமைப்பு**




Credit: Shutterstock



Credit: Andreas Barry,
National Ozone Unit, Indonesia

**சித்திரம் வரைதல்**



Credit: Mariam Aliza Anwaar, aged 12, Pakistan, 'The Effect of Ozone Depletion on the Earth'
in UNEP's 1998 Children's Painting Competition



Credit: Laila Nuri, aged 8, Indonesia in UNEP's 1998 Children's Painting Competition

**புகைப்படக்கலை**



Credit: Shutterstock



Credit: Shutterstock

# 6. ஓவியப்படைப்பு சமர்ப்பிப்பு

- ஓவியப்படைப்பினை தரவேற்றம் செய்வதற்கான நிகழ்நிலை (online) போட்டி இயங்குதளமானது (https://www.ozone2climate.org/artworksubmission) இப்போதிருந்து 2022 மார்ச் 31 ஆம் திகதி இலங்கை நேரப்படி பி.ப. 22:30 மணிவரை திறந்திருக்கும். இணையத்தளத்தை அணுகும் வழிகாட்டலானது இணைக்கப்பட்டுள்ளது (இணைப்பு 1-A ஐப் பார்க்கவும்).
- இவ் இயங்குதளமானது சகல விண்ணப்பதாரிகளுக்கும் பொதுமக்களுக்கும் பின்வரும் தகவல்கள் / சேவை என்பவற்றையும் வழங்கும்: மொன்றியல் உடன்படிக்கை பற்றிய பின்னணித் தகவல்கள், தகுதிசார் தகுதிவிதிகள் உள்ளடங்கலாக போட்டியின் விவரமும் விதிகளும், தேசிய ஓசோன் அலகினால் (NOUs) அனுப்பிவைக்கப்படும் பெயர்குறித்த நியமனங்களிலிருந்து இக்கலைப்படைப்பு தொடர்பில் வாக்களிப்பதற்கு பொதுமக்களுக்கான இடம்; தகவல் உதவிச்சேவை மையம் (Help desk) மற்றும் தேவையான ஏதேனும் பொறுப்புத் துறப்புகள் (disclaimers).
- பங்குபற்றுநர் ஒருவருக்கு பிராந்திய மட்டத்தில் ஒரு பரிசிலுக்கு மாத்திரமே தகுதியுண்டு, எனினும் ஒவ்வொரு பங்குபற்றுநருக்கும் பல கலைப்படைப்புகளின் பதிவுகளை (கலை வகுதியினைப் பொருட்படுத்தாமல் 6 படைப்புகளுக்கு மேற்படாமல்) தரவேற்றம் செய்வதற்கு அனுமதிக்கப்படுகின்றது.
- டிஜிட்டல் (digital) உருவப்படக் கோப்பானது (image file) பரிமாணத்தில் ஆகக்குறைந்தது 2,000 பிக்செலில் (pixels) இருத்தல் வேண்டும் அத்துடன்

இக்கோப்பானது 1 மெகாபைட் (MB) இற்கு மேற்பட்டதாக இருக்க முடியாது. தங்களின் சமர்ப்பிப்பானது ஓர் இறுதிப்போட்டியாளராக அல்லது வெற்றியாளராக தெரிவுசெய்யப்படுமாயின், அச்சிடுவதற்காகவும் காட்சிப்படுத்துவதற்காகவும் உயர் பிரிதிறன் கொண்ட உருப்படங்கள் (high-resolution images) விண்ணப்பதாரர்களிடமிருந்து கோரப்படும்.

- ஓவியப்படைப்பானது பின்வரும் கோப்பு மாதிரியில் (மாதிரிகளில்) டிஜிட்டல் உருவப்படக் கோப்புகளாக சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
  JPEG/GIF/PNG.
- ஒவ்வொரு ஓவியப்படைப்பும் பின்வரும் தகவல்களுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டும்:
  - தலைப்பு
  - உருவாக்கப்பட்ட திகதி
  - ஓவியப்படைப்பை விளக்கும் இணைக்கூற்று (ஆங்கிலத்தில் அல்லது தேசிய மொழியில் ஆகக்கூடியது 100 சொற்கள்).
- வணிக ரீதியான வர்த்தகச் சின்னங்கள் அத்துடன் / அல்லது கம்பனிப் பெயர்கள் போன்றவற்றைக் கொண்ட உருவப்படங்களுடன்கூடிய எந்தவொரு ஓவியப்படைப்பும் தகைமையிழக்கும்.

# 7. மதிப்பீடுகள்

7.1. பொது - புகைப்படக்கலை வகுதி
7.2. பொது - சித்திரம் வரைதல் வகுதி
7.3. பொது - வரைபட வடிவமைப்பு வகுதி
7.4. இளவயது - புகைப்படக்கலை வகுதி
7.5. இளவயது - சித்திரம் வரைதல் வகுதி
7.6. இளவயது - வரைபட வடிவமைப்பு வகுதி

**தெரிவுத் தகுதிவிதிகள்**

அ. கருப்பொருள் / தலைப்புக்கான பொருத்தப்பாடு;
ஆ. படைப்பாக்கம், புத்தாக்கம் மற்றும் ஊக்கம் உடையதாகவிருத்தல்
இ. ஓவியப்படைப்பின் தரம்
ஈ. ஒட்டுமொத்த உணர்வுப்பதிவு

**தேசிய (இலங்கை) மட்டத்தில்**

தேசிய ஓசோன் அலகானது (NOUs) (தேவைப்படின் ஐக்கிய நாடுகளின் சுற்றாடல் நிகழ்ச்சித்திட்டம் (UNEP) மற்றும் உதவிசெய்யும் பங்காளரின் ஆதரவுடன்)

கீழுள்ள வகுதிகளுக்கிணங்க சகல நுழைவுகள் சார்பிலும் தேசிய மட்டத்தில் மதிப்பீடொன்றை நடாத்தும். ஒவ்வொரு வகுதியின் கீழும், தேசிய மட்டத்தில் ஒவ்வொரு வகுதியினதும் முதலிடத்தைப் பெறும் வெற்றியாளர் மாத்திரம் பிராந்தியப் போட்டிக்கு நுழைவதற்கு முன்னிலைப்படுத்தப்படுவார்.

ஒவ்வொரு பங்குபற்றுநருக்கும் இந்நிகழ்வில் பங்குபற்றியமைக்கான **அச்சிடப்பட்ட சான்றிதழ்** ஒன்று தேசிய ஓசோன் அலகு (NOU) மற்றும் UNEP ஆகியவற்றின் மூலம் கூட்டாக வழங்கப்படும். நிகழ்நிலை இயங்குதளங்களுக்கான அணுகுதலைக் கொண்டிருக்காத அப்பங்குபற்றுநர்கள் சார்பில், nouwod.lk@gmail.com எனும் மின்னஞ்சல் அல்லது 0112 034 221 எனும் தொலைபேசி இலக்கத்தின் மூலம் ம. சாரதாஞ்சலி என்பவருக்கூடாக இலங்கை தேசிய ஓசோன் அலகினால் இப் பங்குபற்றுநர்களுக்கு இசைவாக அவர்களின் ஓவியப்படைப்புகளை சமர்ப்பிப்பதற்கென ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும்.

**பிராந்திய மட்டத்தில்**

ஒவ்வொரு வகுதியின் கீழும் தேசியப் போட்டியிலிருந்தான வெற்றியாளர்களின் ஓவியப்படைப்பானது நிகழ்நிலை பொது வாக்களிப்பின் பொருட்டு டிஜிட்டல் இயங்குதளமொன்றுக்கு தரவேற்றம் செய்யப்படும். பரிசிலுக்கான இறுதி மதிப்பீடானது பின்வரும் காரணிகளை அடிப்படையாகக் கொண்டிருக்கும்:

- பொது வாக்களிப்பிலிருந்து 30%
- பிராந்தியத்திலுள்ள தேசிய ஓசோன் அலகிலிருந்து 35%
- UNEP, UNESCO மற்றும் நிபுணர்களை உள்ளடக்கிய நடுவர் குழுவிலிருந்து 35%

# 8. பரிசில்கள்

## 8.1. தேசிய மட்டம்

பெறுமதி வாய்ந்த மூன்று வெற்றிப் பரிசுகளும் (வெற்றியாளர், இரண்டாமிடம் பெறுநர், மூன்றாமிடம் பெறுநர்) அத்துடன் இரு ஆறுதல் பரிசுகளும் இலங்கையில் தேசிய மட்டத்தில் வழங்கப்படும். தேசிய மட்டப் பரிசுகளின் விபரங்கள் பின்வருமாறு.

- வெற்றியாளர்: 20,000.00 ரூபா
- இரண்டாமிடம் பெறுநர்: 15,000.00 ரூபா
- மூன்றாமிடம் பெறுநர்: 10,000.00 ரூபா
- ஆறுதல் பரிசு: 5,000.00 ரூபா

## 8.2. பிராந்திய மட்டம்

ஒவ்வொரு வகுதியினதும் ஒரு வெற்றியாளருக்கும் 5 இரண்டாமிடம் பெறுநர்களுக்கும் UNEP இலிருந்து ஒரு சான்றிதழ் மற்றும் நினைவுச்சின்னம் / வழங்கப்படும் வெற்றிக்கிண்ணம். பிராந்திய வெற்றியாளர்களாக தெரிவுசெய்யப்பட்டிராத, ஒவ்வொரு நாட்டினதும் தேசிய இறுதிப்போட்டியாளர்களை உள்ளடக்கும் 'கௌரவப் புகழாரம்' பரிசுப் பிரிவொன்றும் காணப்படும்.

இறுதிப்போட்டியாளர்களினதும் கௌரவப் புகழாரம் பெற்றவர்களினதும் ஓவியப்படைப்பானது முக்கியமாக UNEP மற்றும் பங்காளர்களின் இணையத்தளங்களிலும், பிரசுரங்களிலும், சமூக ஊடகங்களிலும் அத்துடன் ஏனைய ஊடகங்களிலும் காட்சிப்படுத்தப்படும். உலக ஓசோன் தினம் 2022 இல் உங்களின் நாட்டிலிருந்து வெற்றியாளரை முன்னேற்றுமாறு நாடுகளுக்கு ஊக்குவிப்பு வழங்கப்படுகின்றது.

# 9. பதிப்புரிமைகளும் சட்ட விடயங்களும்

பங்குபற்றுநர்கள் ஓவியப்படைப்புப் பதிவுகளின் தனித்த படைப்பாளராக இருப்பதுடன் அவற்றுக்கான சகல அறிவுசார் சொத்துரிமைகளையும் கொண்டிருக்க வேண்டும். வதியும் நாட்டினைப் பொருட்படுத்தாமல், வேறு எந்தவொரு மூன்றாம் தரப்பினதும் அறிவுசார் சொத்து அல்லது ஏனைய உரிமைகளை மீறாமல், ஓவியப்படைப்புப் பதிவுகளானவை அசலாக (original) இருக்க வேண்டும், எந்தவொரு முன்னைய போட்டிகளையும் வென்றிருந்திருக்கக்கூடாது, வேறெங்கும் பிரசுரிக்கப்பட்டிருக்கக்கூடாது (அச்சு ரீதியிலோ இலத்திரன் ரீதியிலோ), அத்துடன் இந்நிகழ்வின் போது வேறேதேனும் போட்டிகளுக்கான பதிவுகளாக சமர்ப்பிக்கப்பட்டிருக்கக்கூடாது. எவ்வகையிலேனும் படைப்புத் திருட்டு (Plagiarism) அனுமதிக்கப்படுவதில்லை. சமர்ப்பிப்பதற்கு முன்னர் பதிப்புரிமையின் சகல அம்சங்களையும் தெளிவுபடுத்திக் கொள்வது பங்குபற்றுநரின் பொறுப்பாகும். மூன்றாம் தரப்புகளின் பதிப்புரிமை அல்லது ஏனைய அறிவுசார் சொத்துரிமைகளை மீறுகின்ற எந்தவொரு பதிவினையும் இப்போட்டியிலிருந்து தகைமையிழக்கச் செய்வதற்கான உரிமையினை UNEP கொண்டிருப்பதுடன், பதிப்புரிமையின் ஏதேனும் மீறல்களுக்கு அல்லது பதிவுகளின் வேறேதேனும் அதிகாரமளிக்கப்படாத பாவனைக்கு பொறுப்பாகாது அல்லது எவ்விதத்திலும் சட்டப்பொறுப்பிற்கு உட்படாது.

சட்டத்தினால் எழுந்துள்ள அல்லது சட்டத்தினால் எழும்பும் பதிப்புரிமை, தொடர்புபட்ட உரிமைகள் அல்லது வேறேதேனும் அறிவுசார் சொத்துரிமைகளை, தயாரிக்கப்பட்டு

சமர்ப்பிக்கப்பட்ட ஓவியப்படைப்புப் பதிவுகளில் பயன்படுத்துவதற்கென பிரத்தியேமற்ற, திரும்பப்பெறவியலாத (irrevocable), மாற்றப்படக்கூடிய, நிலைத்த, உலகளாவிய அனுமதியினை, செலவு / கடப்பாடு / வரையறை இன்றி இலங்கை தேசிய ஓசோன் அலகிற்கும், UNEP இற்கும் அத்துடன் UNEP இனால் அதிகாரமளிக்கப்பட்ட ஏனைய ஆட்கள் அல்லது நிறுவனங்களுக்கும் பங்குபற்றுநர்கள் வழங்குகின்றனர். UNEP ஆனது, தன் பக்கம் சார்ந்து, அவற்றைப் பயன்படுத்தும் போது ஓவியப்படைப்பினை ஆக்கியவரை / படைத்தவரை சுட்டிக்காட்டி முறையாகப் பாராட்டுவதற்கான கடப்பாட்டினைக் கொண்டுள்ளது. அசல் படைப்புகளின் (originals) திருத்தப்பட்ட பதிப்புகள் உள்ளடங்கலாக, போட்டியின் போதும் அதற்குப் பின்னரும், UNEP இணையத்தளம்/ வெளியீடு அல்லது உரிய ஏனைய இணையத்தளங்கள் / வெளியீடுகளில், முழுமையாகவோ பகுதியாகவோ, சகல பதிவுளையும் பிரசுரிப்பதற்கான உரிமையினை UNEP கொண்டுள்ளது.

மனிதர் சார்ந்த விடயத்துடன் சேர்ந்த ஓவியப்படைப்புப் பதிவுகளானவை (உதாரணம் நபரொருவரின் புகைப்படம்) ஐக்கிய நாடுகள் சுற்றாடல் நிகழ்ச்சித்திட்டத்தினால் (UNEP) பயன்படுத்தப்படலாம் அல்லது பிரசுரிக்கப்படலாம் என்று, போட்டிக்கு சமர்ப்பிக்கப்பட்ட பதிவுகளிலுள்ள ஆளிடமிருந்து (ஆட்களிடமிருந்து) அனுமதியையும் உடன்பாட்டையும் பங்குபற்றுநர் பெற்றிருந்திருக்க வேண்டும். பண்பற்ற, சட்டத்திற்கு முரணான, பாரபட்சமான, பாலியல் வெளிப்பாட்டை உடைய, அல்லது அவதூறான விடயப்பொருளினை, அல்லது ஓவியப்படைப்புப் பதிவுகள் உருவாக்கப்பட்டு தொகுக்கப்பட்ட நாட்டிலுள்ள ஏதேனும் ஏற்புடைய சட்டத்தினை மீறுகின்ற விடயப்பொருளினை ஓவியப்படைப்புப் பதிவுகளானவை உள்ளடக்கக்கூடாது, இல்லையேல் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. பதிவுகளானவை ஏதேனும் மூன்றாம் தரப்பு விளம்பரப்படுத்தல், சுலோகம் (slogan), இலச்சினை, அல்லது வணிகக் குறியை உள்ளடக்கக்கூடாது அல்லது வேறுவகையில் மூன்றாம் தரப்பு அல்லது வணிக நிறுவனம் ஒன்றின் அனுசரணை அல்லது ஆதரவு ஒன்றைச் சுட்டிக்காட்டக்கூடாது.

இப்போட்டியின் அம்சங்கள் அல்லது இப்போட்டியே மாற்றப்படும் அல்லது இரத்துச்செய்யப்படும் பட்சத்தில் UNEP பொறுப்பாகமாட்டாது. இப்போட்டிக்கான எந்தவொரு பங்குபற்றுநரும் அனுபவிக்கும் ஏதேனும் சேதம், இழப்பு, காயம், அல்லது ஏமாற்றத்திற்கான, அல்லது ஏதேனும் பரிசினை ஏற்றுக்கொள்வதன் அல்லது பெறாதுவிடுவதன் விளைவாக ஏற்படும் எந்தவொரு பொறுப்பினையும் UNEP ஏற்றுக்கொள்ளாது.

UNEP இனது எழுத்து மூலமான முன் அனுமதியின்றி, எந்தவொரு நோக்கத்திற்காகவும் UNEP பெயர் அத்துடன் / அல்லது இலச்சினை / முத்திரையைப் பயன்படுத்துவதற்கு அல்லது மூன்றாம் தரப்பினரைப் பயன்படுத்த அனுமதிப்பதற்கு இப்போட்டியின் எந்தவொரு பங்குபற்றுநருக்கும் அதிகாரமளிக்கப்படலாகாது.

தொழில்நுட்ப இடையூறு அல்லது தவறு, வலையமைப்பு நெரிசல்கள் காரணமாக அல்லது வேறேதேனும் காரணத்தினால் ஏற்படும் ஏதேனும் தாமதமடைந்த, இழந்த, பிழையான, அல்லது இனங்காணமுடியாத பதில், பதிவு அல்லது சமர்ப்பிப்புக்கு ஒழுங்கமைப்பாளர் பொறுப்பேற்பதில்லை. ஏதேனும் பதில், பதிவு அல்லது சமர்ப்பிப்பு மீதான பிணக்கொன்று ஏற்படும் பட்சத்தில், ஒழுங்கமைப்பாளரின் தீர்மானமே இறுதியானதாக இருக்க வேண்டும்.

இப்பரிசானது பரிமாற்றப்பட முடியாதது, திருப்பிச்செலுத்த முடியாதது, உரிமைமாற்ற முடியாதது மற்றும் காசு அல்லது காசுக்குச் சமமானதற்கு அல்லது அதே வகையான வேறு ஏதேனும் நலன்களுக்கு பரிமாற்றப்படமுடியாதது ஆகும்.